# இது நமது பல்கலைக்கழகம்!

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்பதற்கு உங்கள் பிள்ளைகளுக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் மிகப் பெறுமதியானதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். இது இலங்கையில் நடைமுறையில் உள்ளவாறு போட்டி அடிப்படையில் கிடைத்த மகத்தான சந்தர்ப்பமுமாகும் அந்த வகையில் நீங்கள் ஒரு அதிர்ஷ்டசாலியாகும். உங்கள் பிள்ளைகளுக்கு கிடைத்த இப்பாக்கியத்தை சிறப்புற பயன்படுத்தி இப்பல்கலைக்கழகத்தின் நற்பெயரை மேலும் உயரச்செய்வதுடன் இதிலுள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி நாட்டுக்கான சிறந்த தலைவர்கள் ஆவதற்கான குணவியல்புகளை வளர்த்து எதிர்கால தலைவர்களாக மிளிர வேண்டுமென வாழ்த்துகின்றோம். கிழக்கே நெய்தலையும், மேற்கே மருதமும் கூடிய ஆற்றுப்படுக்கையாலும் அழகுபெற்ற எமது பல்கலைக்கழகச் சூழல் உங்களை இன்முகத்துடன் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

இந்நிலையில் எமது தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பான சில செய்திகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானதாகவிருக்குமென நம்புகின்றோம்.

- இப்பல்கலைக்கழகத்தின் மிகப்பெரும் சொத்து சகல சமயங்களையும், கலாசாரத்தினையும் பிரதிபலிக்கும் மாணவச் சமூகமாகும். இம்மாணவர்கள் என்றுமே தங்களுக்குள் முரண்பாடின்றி நட்புறவுடன் கல்வி கற்று வருகின்றனர்.

- இங்கு கலை மற்றும் கலாசாரம், வர்த்தக மற்றும் முகாமைத்துவம், விஞ்ஞான கற்கைகள், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி, பொறியியல், தொழில்நுட்பம் முதலான ஆறு பீடங்கள் அமைந்துள்ளன.

- இங்கு பௌத்த விகாரை, இந்துக் கோவில், பள்ளிவாசல், கிறிஸ்தவ தேவாலயம் என சகல மதஸ்தானங்களும் அவரவர் சமயங்களை அனுஸ்டிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

- ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட அஷ்ர.்.ப் ஞாபகார்த்த தகவல் வள நிலையம் மாணவர்களின் அறிவினை மேம்படுத்த பல்கலைக்கழகத்தின் மத்தியில் அமையப்பெற்றுள்ளது.

- சுமார் 2 மாணவர்களுக்கு 01 கனணி என்ற வீதத்தின்படி இப் பல்கலைக்கழகம் கனணி மயப்படுத்தப்பட்டுள்ளதோடு சகல மாணவர்களும் பயன்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு பீடத்திலும் Wi-Fi இணைப்பின் மூலமாக இணையத்தள வசதியும் அமைந்துள்ளது.

- வதிவிட வசதி பெறத்தகுதியான சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்குள்ளேயே வதிவிடம் வழங்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்யும் ஓர் அம்சமாக இருப்பதுடன், வெளித் தொல்லைகளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் இவ் ஏற்பாடு மிகவும் ஏற்புடையதாகவுள்ளது. **தகுதியான சகல மாணவர்களுக்கும் வதிவிடவசதி வழங்கும் வாய்ப்பு இங்கு மாத்திரமே உண்டு.**

- பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களின் நலன் கருதி ஒவ்வொரு பீடத்திற்குமான சிற்றுண்டிச்சாலையும், மத்தியில் விசாலமானதும் சகல பொருட்களும் உள்ளநிலையிலும் ஒரு சிற்றுண்டிச் சாலையும் அமைக்கப்பட்டுள்ளது.

- மாணவர்கள் தங்களது திறமைகளையும், ஆற்றல்களையும் வளர்க்குமுகமாக மாணவர்கள் புத்தூக்கத்திற்கான மையக் கட்டடமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் கரம், செஸ், கராட்டி, தைக்கொண்டோ, டேபிள் டென்னிஸ், பாஸ்கட் போல் போன்ற பல விதமான உள்ளக விளையாட்டுக்கள் விளையாடக்கூடிய ஏற்பாடுகள் உள்ளன. அத்தோடு மாணவர்கள் தங்களது விளையாட்டு ஆற்றலை விருத்தி செய்யுமுகமாக விளையாட்டு ஆலோசனை சபையொன்று நியமிக்கப்பட்டு மாணவர்களின் விளையாட்டு இலக்கை அடையும் நோக்கில் அதற்கான தனி பணிப்பாளரும், பயிற்றுவிப்பாளர்களும், பணியாட்களும் செயற்படுகின்றனர். மேலும் மாணவர்களின் கலைத்திறன்களை வளர்க்குமுகமாகவும், திறமைகளை வெளிக் கொண்டுவரும் நோக்குடனும் பலவிதமான கலை, கலாசார போட்டிகள் நடாத்தப்பட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.







- பல்கலைக்கழகத்திற்குள்ளே மாணவர்களுக்குத் தேவையான வைத்திய சேவைகளை வழங்குமுகமாக வைத்திய மையக் கட்டடத்தொகுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டு மாணவர்களின் வைத்திய தேவைகள் நாளாந்தம் சிறந்த வைத்தியர்களாலும், தாதியர்களாலும் கவனிக்கப்பட்டு வருவதுடன் அவசர சிகிச்சைகளின் பொருட்டு 24 மணிநேர அம்புலன்ஸ் சேவையும் (Hot Line: 0773310007) உள்ளது.

- மாணவர்களுக்கு மன ரீதியான பாதிப்புக்கள் ஏற்படும் வேளைகளில் அவர்களுக்கு உதவக்கூடிய வகையில் அதற்கான Counseling ஏற்பாடுகள் மிகவும் தனிப்பட்ட தன்மை பேணக்கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகமானது பகிடிவதை இல்லாத பல்கலைக் கழக சூழலை பேணும் வகையில் சகல விதமான ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இந்த வகையில் சில சம்பவங்கள் நிகழும் பட்சத்தில் அநீதி இழைக்கப்படும் மாணவர்களின் முறைப்பாடுகளை உடனுக்குடன் பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமுகமாக 24 மணித்தியால தகவல் பதிவு மையம் ஒன்றினையும் **(Hotline: 0779080707)**இயங்கச் செய்துள்ளதுடன், தகவல் தருனர் தொடர்பான தகவல்கள் மிகவும் இரகசியமாக பேணப்படுவதுடன் குறித்த குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கெதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகின்றது. அத்துடன் பகிடிவதை தொடர்பாக கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு இலக்கங்கள், இணையத்தளம் என்பவற்றினூடாக மாணவர்கள் தங்களது முறைப்பாடுகளை முன்வைக்கலாம்.

01. சிரேஷ்ட மாணவ ஆலோசகர் (ஒலுவில்) - 0772226131
02. சிரேஷ்ட மாணவ ஆலோசகர் (சம்மாந்துறை) - 0773514014
03. மார்ஷல் - 0772144811
04. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பகிடிவதைக்கெதிரான நிலையம்
    0112123700 / 0112123456
    eugc.ac.lk/rg/

இவ்வாறான வளங்கள் சகலதையும் கொண்ட இடத்தில் கல்வி கற்க தெரிவாகியுள்ள உங்கள் பிள்ளைகள் இவைகளை அவர்களது முன்னேற்றத்திற்கு முற்றுமுழுதாக பயன்படுத்தி அவர்களை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதினூடாக தாய்த்திருநாட்டிற்கு சேவையாற்றி அதனை சிறந்த தேசமாக கட்டியெழுப்புவதற்கான பங்குதாரர்களாகும் பாக்கியத்தையும் பெற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கலாநிதி. A. றமீஸ்
பணிப்பாளர்,
மாணவர்கள் ஆதரவு சேவைகள் மற்றும் நலத்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.
📱 0772849479 / ☏ 0672255389
**E-mail**: aramees2001@gmail.com
directorsssw@gmail.com

பேராசிரியர். MMM. நாஜிம்
உபவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்.

